தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஐக்கிய இராச்சியக் கிளை
Tamil Education Development Council - United Kingdom
020 8432 6999
07771 753525
admin@tedc.org.uk
www.tedc.org.uk

02/09/2025

வளர்தமிழ் நூல்களைப் பயன்படுத்துகின்ற அனைத்துப் பள்ளிநிர்வாகிகள், தலைமை ஆசிரியர்களுக்கும் வணக்கம்,

**விடயம்: நிர்வாகிகள் சந்திப்பு - September 2025**

நிர்வாகிகள் சந்திப்புக்கான தாழ்மையான அழைப்பு

**நாள்**: 07.09.2025 ஞாயிற்றுக்கிழமை

**நேரம்** : காலை 10.00 மணி முதல் 15:00 மணிவரை

**இடம்**: Canons High School, Shaldon Road, Edgware HA8 6AN

தாங்கள் கோடை விடுமுறையை மகிழ்ச்சியாகக் கழித்திருப்பீர்கள் என்று நம்புகிறோம்.

2025-2026 புதிய கல்வியாண்டில் உங்களைச் சந்திப்பதில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம்.

வழமைபோல ஒவ்வொரு கல்வியாண்டின் தொடக்கத்தில் நடைபெறும் நிர்வாகிகள் சந்திப்பு இவ்வாண்டும் ஏற்கனவே அறிவித்ததிற்கு அமைவாக 07.09.2025 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம்.

இச் சந்திப்பு ஆண்டில் ஒருநாள் நடக்கும் நிகழ்வுக்கான திட்டமிடல் அன்றி ஆங்கிலப்பள்ளி கற்றல் சுமையுடன் தாய்மொழியான தமிழ்க்கல்வியைக் கற்கும் இளம் மாணவச்செல்வங்களின் வாரந்தோறும் கற்பித்தலிற்கான திட்டமிடலுடன் மேம்படுத்தலுக்கானதும் ஆகும். ஆகவே தயவுசெய்து இச் சந்திப்பில் மட்டுப்படுத்தப்பட்ட பின்வரும் நிலைகள் சார்ந்த இருவர் ஒவ்வொரு பள்ளிசார்பாக கலந்துகொண்டு நடைமுறைக்கேற்ற ஆக்கப்பூர்வமான கருத்துக்களுடன் முன்நோக்கி பயணிக்க ஒத்துழைப்புகளை வழங்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.



Registered office address: 162 Franciscan Road, London SW17 8HH
Company Reg No: 09147012

**தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஐக்கிய இராச்சியக் கிளை**
Tamil Education Development Council - United Kingdom
020 8432 6999
07771 753525
admin@tedc.org.uk
www.tedc.org.uk

**பிரதிநிதி 1) நிர்வாகத் தலைவர்**
(இயலாத சந்தர்ப்பத்தில் நிர்வாகத் தலைவரால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட நிர்வாக உறுப்பினர் ஒருவர் மட்டும்)

**பிரதிநிதி 2) தலைமையாசிரியர்**
(இயலாத சந்தர்ப்பத்தில் தலைமை ஆசிரியரால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட நிர்வாக உறுப்பினர் அல்லது ஆசிரியர் ஒருவர் மட்டும்)

மேற்படி விடயங்களை கருத்திற்கொண்டு இரு பிரதிநிதிகளை இதனுடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் **05/09/2025 வெள்ளிக்கிழமைக்கு பிந்தாமல்** அனுப்பி நிர்வாக வேலைகளை இலகுவாக்க தங்கள் ஒத்துழைப்புகளை வழங்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

**படிவம்**: https://forms.office.com/e/kuUPZNacnG

தங்களின் தொடர்ச்சியான ஒத்துழைப்புக்கு மிக்க நன்றி

நன்றி,
நிர்வாகம்
தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஐக்கிய இராச்சியக் கிளை.
02.09.2025

.............................................................................................................................................

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை ஐக்கிய இராச்சியக் கிளையின் உத்தியோக தொடர்பு விவரங்கள்:

- மின்னஞ்சல் : admin@tedc.org.uk
- தொலைபேசி எண்கள்: 020 8432 6999 / 077 7175 3525 / 078 2649 3093 / 075 5486 2602

TEDC UK தகவல்தொடர்புகளின் நம்பகத்தன்மையை சரிபார்க்க, கீழே உள்ள இணைப்பைப் பயன்படுத்தி அதிகாரப்பூர்வ வலைத்தளத்தைப் பார்வையிடவும்.
https://tedc.org.uk/newsletters/